செங்கோட்டை நகர்மன்றத்தில் சாதாரணக் கூட்டம்

02-07-2021 அன்று [illegible] 11.00 மணிக்கு

நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

தலைவர் : [illegible]

தனி அலுவலர் [illegible]

மன்றப் பொருள் :

செங்கோட்டை நகராட்சி அலுவலகப் பணிக்காக 2021–2022ம் ஆண்டிற்கு தேவைப்படும் படிவங்கள், பதிவேடுகள், எழுது பொருட்கள் மற்றும் கணினி சாதனங்கள் மற்றும் அவ்வப்போது தேவைக்கேற்ப அரசு அனுமதி பெற்றுள்ள கூட்டுறவு நிறுவனத்தில் கொள்முதல் செய்ய நகரின் கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி / ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் ;902/2017/டி2)

அலுவலகக் குறிப்பு ;

1. ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

மன்றப் பொருள் :

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டு குத்தகை இனம் பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகனக் காப்பகத்தில் இருசக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு 28–06–2021 முதல் துறை ரீதியாக வசூல் பணி மேற்கொள்ள இருப்பதால் அவசர அவசியம் கருதி உடன் இரசீது புத்தகம் தேவைப்படுவதால் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று இரசீது அச்சிடும் பணி மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதனநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் ; 3090/2020/அ2)

அலுவலகக் குறிப்பு ;

3. அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
4. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

மன்றப் பொருள் :

செங்கோட்டை நகராட்சியில் அனைத்து கோப்பு நடவடிக்கைகளும் UTIS மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பயன்பாட்டிலுள்ள கணினி மற்றும் பிரிண்டர் ஆகியவை 5 ஆண்டுகளுக்கு மேல் பயன்பாட்டில் உள்ளது. மேலும் பணியாளர்களுக்கு போதிய கணினி வசதி இல்லை மற்றும் UPS (3 KV, 25KVக்கு) பேட்டரிகள் காலாவதி ஆகிவிட்டது. எனவே, குறைந்த பட்ச தேவைக்கான கணினி மற்றும்அதன் உபசாதனங்கள் வாங்குவதற்கு ரூ.1,50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணிகளுக்காக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.9487/2020/ADB நாள்.27.04.2021ன்படி அனுமதிக்கப்பட்ட மான்யம் ரூ.1,34,115/– நீங்கலாக மீதமுள்ள தொகை ரூ.15,855/–ஐ நகராட்சி வருவாய் நிதியில் செலவிட மன்றத்தின் அனுமதிக்கு.

(ந.க.எண்.701/2021/இ1)

அலுவலக குறிப்பு:-

1. மன்றம்அனுமதி வழங்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்றமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்

மன்றப் பொருள் :

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018–2019ன் கீழ் செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1, காலாங்கரை பகுதியில் மின்சார வாரியம் அலுவலகம் அருகில் ரூ.9.70 லட்சம் மதிப்பீட்டில் அங்கன் வாடி கட்டிடம் கட்டப்பட்டு வருகின்றது. மேற்படி கட்டிடம் கட்ட வேண்டிய இடத்தின் மேல் பகுதியில் உயர் அழுத்த மின் பாதை செல்வதா மேற்கண்ட மின் பாதையினை மாற்றி அமைக்க மின்சார வாரியத்தை கோரப்பட்டது. மின்வாரிய உதவி பொறியாளர், செங்கோட்டை அவர்களின் 17.06.2021ம் நாளைய கடிதத்தில் மின்பாதையை மாற்றி அமைக்க மதிப்பட்டு கட்டணம் ரூ.1,01,190 செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டு கட்டணம் ரூ.1,01,190 ஐ வருவாய் நிதியில் இருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு ;

1. மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப் பொருள் :

செங்கோட்டை நகராட்சி அலுவலக கணினி பிரிவிலுள்ள பிரிண்டர்களுக்கு Toner Refilling செய்வதற்கு 01–07–2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | Refilling Toner | Qty | ரூ. |
|---|---|---|---|---|
| 1 | Empire Print Technology, Tenkasi | 55A Toner | 1 | 500/– |
| | | 12A Toner | 1 | 500/– |
| 2 | Agni Computer, Tenkasi | 55A Toner | 1 | 700/– |
| | | 12A Toner | 1 | 600/– |
| 3 | Essar Systems, Tenkasi | 55A Toner | 1 | 700/– |
| | | 12A Toner | 1 | 550/– |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண் (1) Empire Print Technology, Tenkasi நிறுவனத்தின் விலைப்புள்ளி தொகை உள்ளதை மன்றம் ஏற்கலாம்.

அலுவலகக் குறிப்பு ;

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

மன்றப் பொருள் :

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள டம்பர் பிளேசர் வாகனம் எண் டிஎன் 76 பி 8356 வாகனத்தினை டிப்பர் வாகனமாக மாற்றும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அழைப்பானை 26.02.2021 அன்று கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் அளித்துள்ள விலைவிகிதத்தினை அனுமதிக்க மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்த விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | மூஸா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், தென்காசி | செங்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள டம்பர் பிளேசர் வாகனம் எண் டி.என் 76 பி 8356 வாகனத்தினை டிப்பர் வாகனமாக மாற்றும் பணி மேற்கொள்ள | ரூ.2.00 லட்சம் | ரூ.1,95,000 |
| 2 | முருகன் மோட்டார் ஒர்க்ஸ், கொட்டாகுளம் | | | ரூ.1,99,000 |

(ந.க.எண்: 804/ 2020/ எச்1)

அலுவலகக் குறிப்பு ;

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மூஸா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், தென்காசி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரித்து அனுமதி வழங்கலாம்.

மன்றப் பொருள் :

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டு குத்தகை இனம் பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகனக் காப்பகத்தில் இருசக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு 28-06-2021 முதல் துறை ரீதியாக வசூல் பணி மேற்கொள்ள இருப்பதால் அவசர அவசியம் கருதி உடன் இரசீது புத்தகம் தேவைப்படுவதால் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று இரசீது அச்சிடும் பணி மேற்கொள்ள 28-06-2021ம் தேதி உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிள்ளிகள் பெறப்பட்டுள்ளன, பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீ துர்கா பிரஸ், செங்கோட்டை என்ற நிறுவனத்திற்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியினை பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் விபரம் | புத்தகம் எண்ணம் | ஸ்ரீ துர்கா பிரஸ், 11, பம்பு ஹவுஸ் ரோடு, செங்கோட்டை நிறுவன ஒப்பந்தப்புள்ளி விபரம் | ஸ்ரீ பார்வதி ஆப் செட், மேல பஜார், செங்கோட்டை நிறுவன ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலைய இருசக்கர வாகனக் காப்பகம் கட்டணம் வசூல் உரிமம் இரசீது புத்தகம் அச்சிடும் பணிகள் | 100 பக்கம் கொண்ட இரசீது புத்தகம் 20 எண்ணம். | ரூ.700/– | ரூ.750/- |

(ந.க.எண்3090/2021/அ1)

அலுவலகக் குறிப்பு ;

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஸ்ரீ துர்கா பிரஸ், செங்கோட்டை நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

மன்றப் பொருள் :

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டு குத்தகை இனம் பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகன காப்பகத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமமானது 31-03-2021 உடன் குத்தகை காலம் முடிவடைந்த நிலையில் தேர்தல் நன்னடத்தை விதிகளின் காரணமாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்5304/2021/ஆர்2 நாள்.16.03.2021ன் படி மேலும் இரண்டு மாத காலத்திற்கு கீழ்கண்ட குத்தகை இனத்தினை 2020-2021ம் ஆண்டுக்கான குத்தகைத் தொகையில் அனுபவித்துக் கொள்ள உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் 01-04-2021 முதல் 31-05-2021 வரை இரண்டு மாதத்திற்கு மட்டும் மேற்கண்ட குத்தகை இனத்தினை அனுபவித்து வந்த திரு.எல்.சுப்பிரமணியன், குத்தகைதாரரின் பெயரில் உள்ள காலங்கடந்த குத்தகை வைப்புத் தொகையில் உள்ள ரூ.1,00,000/- தொகையில் இருந்து நகராட்சி வரியில்லா இனம் கணக்கிற்கு ரூ.26,345/- தொகையினை ஈடு செய்திடவும், மீதம் உள்ள ரூ.73,655/- தொகையினை திரு.எல்.சுப்பிரமணியன், குத்தகைதாரருக்கு மீள வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்3090/2021/அ1)

அலுவலகக் குறிப்பு ;

1. காலம் கடந்த குத்தகை வைப்புத் தொகையில் இருந்து நகராட்சி வரியில்லா இனம் கணக்கிற்கு ரூ.26,345/- தொகையினையும், ரூ.73655 தொகையினை திரு.எல்.சுப்பிரமணியன், குத்தகைதாரருக்கு மீள வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப் பொருள் :

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வண்டி எண் TN 76 P 8356 வண்டிக்கு விபத்துக் காப்பீடு 30-06-2021 முதல் 29-06-2022 வரை புதுப்பிக்க யூனிடெட் இந்தியா இன்சூரன்ஸ், தென்காசி என்ற நிறுவனத்திற்கு ரூ.32705/- தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் ; 3144/2012/எச்1)

அலுவலகக் குறிப்பு ;

1. விபத்துக் காப்பீடு புதுப்பிக்க யூனிடெட் இந்தியா இன்சூரன்ஸ், தென்காசி என்ற நிறுவனத்திற்கு ரூ.32705/- தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியல் இருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப் பொருள் :

செங்கோட்டை நகராட்சியின் 2020-2021ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ;

1. மன்றம் பதிவு செய்யலாம்.